விலை ரூபா 1-00

★ஒரு வாரமாகத் தொடரும் உபாலி 'மர்மம்'

ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 8 ஜ. அவ். 6 இதழ் 10

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20—2—83

# குமணக்கடலில் மிதந்தது விமானத்தின் எண்ணெயா?

[கொழும்பு]

கிழக்குப்பகுதியிலுள்ள குமணப் பிரதேசத்திலுள்ள உகந்தைக் கடலில் மிதந்தது விமானங்களுக்குப் பயன்படுத்தும் எண்ணெயா? என்பதை இன்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பகுப்பாய்வு செய்யும்.

இன்று விடுமுறை நாளாக இருந்தாலும், உபாலி ஜெட் விமானத்தின் மர்மத்தை துரிதமாகத் துலக்கும் நோக்குடன் கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவை, சப்புக்கர்தை தொழிற்சாலைகளில் இந்த ஆய்வு நடாத்தப்படும்.

சென்ற ஞாயிறு இரவு ஒளிப்பிழம்பு ஒன்று கடலில் விழுவதைக் கண்டதாக குமண மலைப் பகுதியின் மலைச்சாரலில் வாழும் பௌத்த பிக்கு ஒருவரும், மற்றும் சிலரும் தகவல் தெரிவித்திருந்தனர். குறிப்பிட்ட குமணப்பகுதிக் கடலில் பெருமளவு எண்ணெய் மிதப்பதாக மீனவர்களும் தகவல் தெரிவித்திருந்தனர் இதனைத் தொடர்ந்து, பொலிஸ் குழுவொன்று உகந்தை என்ற இடத்திலிருந்து இரண்டரைமைல் தூரத்தில் நேற்று சென்று, கடலில் மிதந்த எண்ணெயை டின்களில் எடுத்துவந்து ஆய்வு கூடப் பரிசோதனைக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

இந்தக் கடல் பகுதிமிகவும் ஆழமானதென்றும் கடல் நீரோட்டம் பெரும் வேகம் கொண்டதென்றும், ஏதாவது கனமான பொருள் விழுந்து மிதக்க ஆரம்பித்தால் 100 மைல் தூரத்துக்கு அடித்துச் செல்லப்படுமென்றும், தென்பகுதிக்கு அடித்துச்செல்லப்பட்ட பொருள் பின் மேற்குப்பகுதிக்கு அடித்துச் செல்லப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே நேரத்தில் சுமத்ரா தீவிலிருந்து 60மைல்

(8ப் பக்கம் பார்க்க)

# பாவனைப் பொருட்களின் விற்பனை வரி அதிகரிப்பு

(இ. கந்தசாமி)

**பாவனைப் பொருட்கள் பலவற்றின் மொத்த விற்பனை வரி (பி. ரி. ரி.) அதிகரிக்கப்பட்டுள்ளது. சுங்கத்தீர்வையும் உயர்த்தப்பட்டிருக்கிறது.**

சிகரட், மதுபானம், கோதுமை, சீனி, குளிர்பானம், செய்தித்தாள் போன்ற பல பொருட்களின் மொத்த விற்பனை வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

18ம் திகதி நள்ளிரவு வெளியான விசேடவர்த்தமானியில் நிதி அமைச்சு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சிகரட்டின் மொத்த விற்பனை வரி 40 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சாராயம், விஸ்கி, றம், ஜின், புகையிலை, பீடி போன்றவற்றின் வரி 20 சதவீதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

வீட்டுப் பாவனைக்குரிய சீனி, மின்சாரப் பொருட்கள் விற்பனை வரி 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

அரிசி, மருந்து, ஹார்லிக்ஸ், உரவகைகள், கோழிமுட்டை, பியர், சீமெந்து, சாக்லட், டின்பால், பழரசம், ஐஸ்கிறீம், ஜாம், ஜெலி, தைத்த ஆடைகள் ஆகிய பொருட்கள் வரி 10 சதவீதத்தால் உயர்ந்துள்ளது.

மோட்டார் வாகனங்கள் சைக்கிள்கள், வீடியோகசற்றுகள், அலங்கார விளக்குகள் ஆகியனவற்றுக்கு 15 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

113பொருட்களுக்குமொத்த விற்பனவு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரத்தினக்கல் வியாபாரத்துக்கும், உல்லாசப் பயணங்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## உயிருக்குப் போராடிய இலங்கை மீனவர்!

(சென்னை)

உயிருக்காகப் போராடித் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் காப்பாற்றப்பட்டார்கள்! தனுஷ்கோடி பகுதியிலிருந்து இவர்கள் பத்திரமாக நேற்று இராமேஸ்வரத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்!

தலைமன்னாரில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற இவர்களின் இயந்திரப்படகு, கடும்நீரோட்டத்தினால் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் எரிபொருள் தீர்ந்துவிட்ட நிலையில் ஆபத்தில் சிக்கியபோதே இந்தியர்கள் இவர்களை காப்பாற்றினர்.

இவர்களது இயந்திரப்படகு செயலிழந்ததால், மனமுடைந்து என்னசெய்வதென்று தெரியாத நிலையில் இருந்த போதே இந்திய மீனவர்கள் இவர்களைக் காப்பாற்றிச் சென்றனர். (சு)

## தோட்டக்கிணற்றுள் துப்பாக்கியின் ஒருபகுதி!

[மாவிட்டபுரம்]

தேடுதல் நடத்திய இராணுவத்தினர் தோட்டக் கிணறு ஒன்றுக்குள்ளிருந்து துப்பாக்கியின் முன்பாகத்தை கண்டெடுத்துள்ளனர்.

இரகசியத் தகவலொன்றின் பேரில் காங்கேசன்துறை பகுதியிலுள்ள பனை என்ற இடத்தில் இந்தத் துப்பாக்கியின் முன்பாகம் எடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் பகல் பூராவும் இத் தேடுதல் வேட்டை நடைபெற்றது.

இதனால் இப்பகுதியில் அன்று பூராவும் பதட்ட நிலை ஏற்பட்டது.

ஏற்கனவே இப்பகுதியிலுள்ள ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருகிறார். இதனைத் தொடர்ந்து மேலும் ஒருவரை

[8-ம் பக்கம் பார்க்க]

## ஆவரங்காலில் கடத்தப்பட்ட ஜீப்!

(ஏ. வி. மாணிக்கம், ஏ. என். எஸ். திருச்செல்வம்)

பருத்தித்துறை பஸ் நிலையத்துக்கு அருகில் இரு பொலிஸாரையும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கிவிட்டு, இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட 'ஜீப்' ஆவரங்கால் சிவன்கோவில் மேற்குப் பக்கமாக ஒழுங்கைக்குள் அமைந்த வளவு ஒன்றுக்குள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி ஈ. கே. ஆர் விஜேவர்த்தன, ஜீப் சாரதி வீரசிங்கா இருவரும் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதுதெரிந்ததே.

ஏறத்தாள இரவு ஒன்பது மணிக்கு ஆவரங்கால் வளவுக்குள் ஜீப் வேகமாக கொண்டுவரப்பட்டு, அதிலிருந்து அறுவர் இறங்கியதை அப்பகுதியில் குடியிருப்பவர்கள் சிலர் கண்டதாக தெரிவித்துள்ளனர்.

ஜீப்பை விட்டு இறங்கிய ஆறுபேரும், மூன்று சைக்கிள்கள் வீதியில் வந்துகொண்டிருந்தவர்களிடம் துப்பாக்கி முனையில் பறித்துக் கொண்டு தலைமறைவாகி விட்டதாக

[8-ம் பக்கம் பார்க்க

## சொந்த ஊர்களுக்கு சடலங்கள்!

(யாழ்ப்பாணம், புலோலி)

பருத்தித்துறையில் கொலையுண்ட இரு பொலிஸாரினது சடலங்கள் விமான மூலம் நேற்றுயாழ்ப்பாணத்திலிருந்து அவர்களது சொந்தஊர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டன.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஈ கே ஆர். விஜேவர்த்தன கடவத்தையைச் சேர்ந்தவர். நாற்பது வயதான இவருக்கு இரு குழந்தைகள் இருக்கிறார்கள்.

ஜீப்சாரதி வீரதுங்கா களுத்துறையைச் சொந்த இடமாகக் கொண்டவர். இருபத்தெட்டு வயதான இவருக்கு இன்னமும் திருமணமாகவில்லை இவர் வேலையில் சேர்ந்து நான்கு மாதங்கள் தான் ஆகின்றன. (மா)

## பருத்தித்துறை நிலைமை

(புலோலி)

பொலிஸார் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானசம்பவத்தையடுத்து, பருத்தித்துறை பஸ் நிலையம் அன்றிரவு தற்காலிகமாக சிலமணிநேரம் சிவன்கோவிலடியில் இயங்கியது.

நேற்று பருத்தித்துறைப் பகுதியிலுள்ள கடைகள் எல்லாம் பூட்டப்பட்டிருந்தன. சந்தை கூடவில்லை வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன.

"MARBLES"
Terrazzo Flooring
நம்பிக்கைக்கும்
நவநாகரீகத்துக்கும்
அழகுக்கும்
ஆலயங்கள், மண்டபங்கள், வீடுகளுக்கு
கவர்ச்சிகரமான வர்ணங்களில்
'ரெருசோ மாபிள் நிலம்''
அமைக்க விருப்புகிறீர்களா?
நீண்டகால அனுபவம் உள்ள ஒரே ஒரு ஸ்தாபனம்
"ஸ்ரீ கிருஷ்ணனந்த் கொங்கிறீட் வேக்ஸ்''
(அரசாங்கத்தினதும் கூட்டுத்தாபனங்களினதும் பதிவுப்பட்ட ஒப்பந்தகாரர். பதிவு இல 12144)
தொல்புரம், சுழிபுரம்.
தொலைபேசி இல. 237 வட்டுக்கோட்டை.
எங்கள் உப தயாரிப்புகள்:-
மலசலகூட கற்கள்,
பூசாடிகள், E. W. பைப்புகள்
பாத்றூம் நிலத்துக்கு பதிக்கும் கற்கள்
(Preastiles)
ஞாபகார்த்த எழுத்து தட்டுகள்
(Memorial Stones)
சமையல் அறை ரெருசோசிங், றெயினிங்போட்
(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.)
மற்றும் விபரங்களுக்கு:
விற்பனை நிலையம்
"மாபிள்ஸ்''
42, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 23407
[6256]

# வரி விளம்பரம்

## வகுப்புகள்

அரசாங்கத்தால் ஒரேயொரு தனியார் நிறுவன சிரேஷ்ட பாடசாலையென அங்கீகரிக்கப்பட்டது. இக்கல்லூரியில் G.C.E (O/L), G.C.E (A/L), G.S.Q (Bio); G.S.Q.(Physical & Maths), B.S.c. (Bio); B.S.c (Physical & Maths) வரையில் நடைபெறுகிறது. இக்கல்லூரியில் விஞ்ஞான செய்முறைகள் பட்டதாரிப் படிப்புக்கேற்ற முறையில் விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டுள்ளது. The Principal. The College of Higher Studies, 73, Point Pedro Road, Anaipanthy, Jaffna. 6238

Montessori Teachers Diploma Training Course பாலர் பயிற்சி வகுப்பு) 5 - 3 - 83 ஆரம்பமாகவுள்ளது. 25-2-83 க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 6239

## பயிற்சி

றேடியோ. டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங் எலக்றிக்கல் வயறிங், மோட்டார் மெக்கானிசம், Hotel Management, English செய்முறைப் பயிற்சிகளுடன் மீண்டும் ஆரம்பம் 27-02-83. விபரம் நேரில், The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 6228

## காணவில்லை

சில தினங்களுக்கு முன்னர் உறுதி முதலிய முக்கிய தஸ்தாவேஜுகள் கொண்ட ஒரு கோவை (File) யாழ்ப்பாணம் நகரில் பிரயாணத்தின்போது தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் ஐயா. சச்சிதானந்தம், 222/4, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறிவித்தால், அவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும் 6244



யாழ்நகரில்
பலவகைப் பரிசுப் பொருட்கள்
எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல் வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன் ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## தேவை

காசாளர், எழுதுவினைஞர், தமிழ், ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து ஆசிரியர்கள் தகைமை குறைந்தது க. பொ. த. உயர்தர சித்தி. மேலதிக தகைமைகட்கு முன்னுரிமை வழங்கப்படும். 25-2-83 ற்கு முன் விண்ணப்பிக்கவும். Director Keen Institute, (Reg. No: 13400), 253 1/1, Stanley Road, Jaffna. 6243

இறைண்டிங் மில்லில் வேலை செய்வதற்கு ஆண்கள், தேவன்ஸ் சீயாக்காய் பவுடர் பைக்கற் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவன்ஸ் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6246

யாழ். நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தை பொறுப்புடன் நடத்த நம்பிக்கையானவர் தேவை, பிணைப்பணம் செலுத்தக் கூடியவர் விண்ணப்பிக்கவும். நிலையத்தில் தங்கி வேலை செய்பவருக்கு முதலிடம் அளிக்கப்படும். இத்துடன் பலசரக்கு கடைக்கு பையன்கள் தேவை. P. அந்தோனிப்பிள்ளை, 50, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 6252

ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி அல்லது கஸ்தூரியார் வீதியில், அலுவலகமாகப் பாவிப்பதற்கேற்ற 200 — 300 ச. அடி விஸ்தீரணமுள்ள கட்டிடம் தேவை. சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 6221 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 6221

நல்ல ஆங்கில அறிவுள்ள நம்பிக்கையான வேலைத்தல மேற்பார்வையாளர் / களஞ்சியப்பொறுப்பாளர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6258 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 6258

## சோதிடம்

வெளிநாடு செல்லுதல்' திருமணம், உத்தியோகம்' கல்வி, திருமணப் பொருத்தம் முதலியன. குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. K.L. M. Krishnapillaiy ஸ்ரீபராசக்தி சோதிட நிலையம் 151, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6257

## FOR SALE

Austin Cambridge E N 9191 good Condition Highcst Offer Dr S. Balakrishnan, 1st. Mile Post, Point Pedro. 6212

### பாலர் பகல் விடுதி நீர்வேலி

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டு இழுப்பில் பரிசு பெறும் இலக்கங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 1வது பரிசு சீட்டு இல. | 1093 |
| 2வது ,, ,, ,, | 0909 |
| 3வது ,, ,, ,, | 4021 |

ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 1வது பரிசு சீட்டு இல. | 2643 |
| 2வது ,, ,, ,, | 3278 |
| 3வது ,, ,, ,, | 3626 |
| 4வது ,, ,, ,, | 2210 |
| 5வது ,, ,, ,, | 545 |

காரியதரிசி

6255

## விற்பனைக்கு

தெல்லிப்பழை 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முழு விபரம் – சண்முகநாதன் "மதன கிரி" தபால் கந்தோர் வீதி தெல்லிப்பழை. 6220

மணல் தறை ஒழுங்கையில் பலாலி வீதியில் இருந்து சிறிது தூரத்தில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல:6247 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 6247

சாவகச்சேரி கண்டிறோட் 190 – ம் மைலுக்கருகில் 4 பரப்புக்காணி வசதியான வீட்டுடன் விற்பனைக்குண்டு. பொ. பா. சுவாமிநாதஐயர், ஐயர் லேன், நுணாவில் கிழக்கு 6251


பாவித்த றூபின் ஜெனறேற்றர் [1500 வற்ஸ்] விற்பனைக்குண்டு. தொடர்பு: R. மரியநாயகம் "மலர் வாசா" அக்கதணை இலவாலை. 6250

சண்முகநாதன் புத்தகசாலை அருகில் சுமார் 3 பரப்பு, 4 கடையும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ச. மு. திருஞானம் செட்டியார், 293. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6248

மீசாலை புகையிரத நிலயத்திற்கு அருகாமையில் வீடுகள் கட்டக்கூடிய 75 பரப்புக் காணி, 4 பரப்புக் கொண்ட துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். உடன் தொடர்பு கொள்க: பா. சுப்பிரமணியம் சட்டத்தரணி, தும்பளை, பருத்தித்துறை. (6234)

## நன்றி நவிலல்

மனோகரன் குகானந்தன்



தோற்றம்: 7-3-56
மறைவு: 31-1-83

எங்கள் அருமை மகனுடைய/சகோதரனுடைய மரணச்சடங்கில் சமூகம் தந்த உற்றார் உறவினருக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பிய அன்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். குறிப்பாக இலங்கை வங்கி, யாழ்ப்பாணக்கிளை மனேஜருக்கும் ஊழியருக்கும், பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் எங்கள் நன்றிஉரித்தாகுக.

தங்கவடிவேலு தம்பதிகள்
ஜெயநாயகி, சற்குணன்,
நிர்மலம், உருத்திரன்
2, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

6225

## வாடகைக்கு

சுன்னாகம் கே கே எஸ் வீதியில் ஜெட்மோட்டோர்ஸ் அருகில் கடையும் அதனுடன் சேர்ந்த கட்டிடமும் வாடகைக்குண்டு தொடர்பு மா. தேவராசா மயிலணி வீதி சுன்னாகம். 6249

விற்பனையாகின்றன!
இறக்குமதி
ஓட்டுப் பலகைகளும்
அழகிய தேக்கம்
முகப்புக் கதவுகளும்
வேண்டிய
அகல, உயரங்களில்
பெற்றுக்கொள்ளலாம்
இப்ராகிம்
ஜபார்ஜி,
218, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
போன்: 22409

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்

## கட்டிடத் திறப்பு விழா

(அரியாலை)

யாழ் நல்லூர் தெற்கு ஸ்ரீ ஸ்ரீ கினெஸ்வரா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத் திறப்பு விழா பாடசாலை அதிபர் திரு ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நாளை திங்கள் பிற்பகல் நடைபெறும்.

வட்டாரக்கல்வி அதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரமும் புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு சி. இராசநாயகமும், மங்களவிளக்கேற்றி வைக்க, யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரன் கட்டிடத்தைத் திறந்து வைப்பார் வட மாநில கல்விப்பணிப்பாளர் திரு ம. சிமியாம்பிள்ளை சிலாசாசனத்தை திரை நீக்கஞ் செய்து வைப்பசர்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகும் பொதுக் கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் திரு பொ. புண்ணியசிங்கமும், பழையமாணவர் சங்க உறுப்பினர் திரு செ. பொன்னுத்துரையும், கல்வியதிகாரிகளும், பாராளுமன்ற உறுப்பினரும் உரையாற்றுவர். ஆசிரியர் திரு த. தர்மலிங்கம் நன்றியுரை கூறுவசர். மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## ஒளி எறிவு இயந்திர இயக்குநர்
(PROJECTOR OPERATOR)

அனுபவம் வாய்ந்த இயக்குநர் தேவை.
சினிமா ஊழியர் நிர்ணய சம்பளம் வழங்கப்படும்.
அனுபவ சான்றிதழ் போட்டோ ஸ்டட் பிரதியுடன் விண்ணப்பிக்கவும்.

பெறுநர்,
பராசக்தி படமாளிகை,
கிளிநொச்சி.

6236

## ஆட்கள் தேவை

1. நெல்லியடி பஸ் நிலையத்தின் அருகில் உள்ள ஐஸ் தொழிற்சாலை ஒன்றில், சைக்கிளில் ஐஸ் பழம், ஐஸ் சொக் ஆகியன விற்பனை செய்வதற்கு ஆட்கள் தேவை. கமிஷன் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படும்.
2. ஐஸ் கிறீம், ஐஸ் பழம், ஐஸ் சொக் ஆகியன தயாரிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒருவர் தேவை. தகுதிக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

மேற்படி வேலைக்குத் தகுதி வாய்ந்தோர். இம்மாதம் 23-ம் திகதி (23-2-83) காலை 10 மணி தொடங்கி மாலை 6 மணிக்குள் நெல்லியடி விலாசத்திற்கு நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

உரிமையாளர்,
கிறீன்லண்ட்ஸ், பஸ் நிலையம், நெல்லியடி.

6254

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலில் நடைபெற்றுவரும் திருப்பணி வேலைகளையொட்டிய செலவினங்களுக்காகவோ, கோவிலுக்கு விழாக் காலங்களில் வழிபாட்டுக்காக வருகின்ற பல ஆயிரக்கணக்கான இறை பயணி [யாத்திரீகர்]களுக்கு குடிநீர் விநியோகித்தல், அன்னதானம் வழங்குதல் முதலிய தொண்டுகளை மேற்கொள்ளுவதற்காகவோ பொதுமக்களிடம் பணம் அல்லது பொருட்கள் கோரிவரும் எவருக்கும், அவர் எமது அறங்காவலர்களுளொருவராகவோ, கோவிலின் குருமார்களுள் ஒருவராகவோ இருந்தாலும்கூட, எந்தவிதமான நன்கொடையும் வழங்கவேண்டாமென இத்தால் பொதுமக்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். பல தனி நபர்களும், ஒரு சில தனிநபர்கள் சுயநலம் கருதி தாமே சிருஷ்டித்துள்ள ஸ்தாபனங்களும், இவ்வித நன்கொடை வசூலை ஒரு வியாபாரமாகவே கருதிச் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் யாருக்கும் எவ்வித உதவியும் அளிக்கவேண்டாம் எனக் கோருவதோடு, அடியார்களின் சகல தேவைகளையும் கோவில் நிர்வாகமே சிறப்புறக் கவனிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதனால், தங்கள் நன்கொடைகளை காசோலை / காசுக்கட்டளை / தபாற்கட்டளை மூலமாக "பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்" என்ற முகவரிக்கே அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். எக்காரணம் கொண்டும் ரூபாய் நோட்டுகளை அனுப்பவேண்டாம். நன்றி.

நா. சிவராசசிங்கம்
செயலாளர்,
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்,
அறங்காவலர் சபை.

9-02-1983

(6124)

# 'வன்முறைகள் ஒருபோதும் சுமுக முடிவுகளைத் தராது!''

## இந்திய ஜனாதிபதி எச்சரிக்கை

புதுடில்லி, பெப். 19

''நாட்டைப்பிரிக்கும் சக்திகளுக்கெதிராக மக்கள் விழிப்புடன் செயல்படவேண்டும். வன்முறைகள் ஒருபோதும் சுமுக முடிவுகளை எட்டிவிடமாட்டா'' என்று இந்திய ஜனாதிபதி ஜியானி ஸெயில்சிங் நேற்று பாராளுமன்றக் கூட்டத்தில் உரையாற்றினர்.

ஜனாதிபதி ஸெயில் சிங் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது, ''ஒரு நாட்டைக் கூறுபோடுவதென்பது அபாயகரமான விளைவுகளையேதோற்றுவிக்கும் எனவே நாட்டு மக்கள் பிளவுச்சக்திகளை விழிப்புடனிருந்து எதிர்க்கவேண்டும்.

இந்தியா அதன் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பணவீக்கநிலைமைகளை ஓரளவு வெற்றியுடன் சமாளித்து வருகின்றது இதுபாராட்டுக்குரியதாகும்''.

'ஆசியாட்' விளையாட்டுக்களை வெற்றிகரமாக நடத்தி முடிந்தமை, அந்தாட்டிக்ஆராய்ச்சிப்பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டமைபோன்றவற்றால் சர்வதேச ரீதியில் இந்தியாவின் தரம் ஒருபடி உயர்ந்துள்ளது.

''எதிர்வரும் மார்ச்சில்நடைபெறவுள்ள அணிசேரா இயக்கத்தின் உச்சிமகாநாட்டையும் இந்தியா வெற்றியுடன்நடத்தி முடிக்கும் என்ற நம்பிக்கை உண்டு''என்றார்.

ஜனாதிபதியின் இந்த உரை 30நிமிடங்களுக்கு இடம்பெற்றது. (கி)

# அரசைக் கவிழ்க்க சதிசெய்த வழக்கு

(கொழும்பு)

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாக ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பதினறுப்பேர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் கொழும்புமேல்நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி. எல். ரி. மூனமலே முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, ஏ. எம். கருணாரத்தின, அனுரத்த ரக்வத்த, திருமதி தாமரா இலங்கரத்தின உட்படபத்துப்பேர் மீது அரசாங்கத்தைக்கவிழ்க்கவும், மற்றும் 41 குற்றச்சாட்டுகள் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஆறுவது எதிரி தவிர்ந்த மற்றைய எதிரிகள் சார்பில், திரு. சி. நடேசன்கியூசி, ரஞ்சித் அபயசூரிய, திரு சரத்முத்தெட்டுவேகம, திரு குமார் பொன்னம்பலம் ஆகியோர் ஆஜரானார்கள். 6ம் எதிரிசார்பில திரு. டி, எஸ். விஜயசிங்கா ஆஜரானார்.

எதிரிகள் விசேட பிணையில் இப்போது விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், இவர்களை பிணையில் விடுவதா, இல்லையா என்பதைவிசாரிக்க 25ம் திகதி நீதிமன்றம் கூடும்.

சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, உபதலைவர் திரு. ரி. பி. இலங்கரத்தின ஆகியோர் வழக்கு விசாரணையை பார்க்க வந்திருந்தனர்.

# காப்டன் ஆனந்தப்பாவின் நண்பர்கள் படும்பாடு!

(கொழும்பு)

உபாலி விமான காப்டன் நொயல் ஆனந்தப்பாவின் மிக நெருங்கிய நண்பர் காப்டன் ஒஸ்மண்ட் போல் என்பவர். தனது சகாவுக்கு நேர்ந்த கதியை அறிந்து மின்னல் வேகத்தில்இவர் செயலில்இறங்கினர். ஆனந்தப்பா போன்றே தனியார் கம்பனி யொன்றின் விமானமோட்டியாவார் இவர். இவர் செலுத்தும் விமானங்களில் ஒன்று 'சீபிளேன்' என்பது. இந்த விமானம் கடலிலும் கப்பல் போல் செல்லக் கூடியது!

காப்டன் போல் இந்த விசேட விமானத்தில் ஏறி இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தை சல்லடைபோடலானர். ஆகாயத்தில் பறப்பதும் கடலில் இறங்குவதுமாக அவர் தமது 'சீ பிளேனை' இயக்கியவிதம் ஆனந்தப்பாவுடன் அவருக்கிருந்த நெருக்கத்தை காண்பித்ததென்று விமானப்படை விமானிகள் தெரிவித்தனர்.

25 வருடங்களுக்கு முன்னர் சீனக்குடா விமானத்தளத்தில் ஆனந்தப்பாவை போல் சந்தித்தார். இருவரும் ஒரேயடியாக பதவி உயர்வுகளைப் பெற்று ஒரேகாலத்தில் விமானப் படையிலிருந்து விலகியவர்களாம்!

போலைப் போன்று ஆனந்தப்பாவுக்கு நெருங்கியவரே பிறியன் லொறன்ஸ் என்ற விமானி! இவரும் தமது சிறிய சொந்தவிமானத்தில் தனித்துச் சென்று கிழக்கிலங்கையை நோட்டமிடுகிறாராம். (கி)

## மேற்கிந்திய -- இந்திய டெஸ்ட்

# கிளைவ் லொயிட் தலைமையில் பலம் வாய்ந்த மேற்கிந்திய அணி!

கிங்ஸ்டன், பெப். 19

இந்திய கிரிக்கெட் அணிக்கும், மேற்கிந்திய கிரிக்கெட் அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் பந்தயம் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகிறது.

மேற்கிந்திய அணிக்கு அதன் பெயர் பெற்ற ஆட்டக்காரரான கிளைவ் லொயிடே தலைமை தாங்குகிறார். இவருடன் தலைசிறந்த துடுப்படி வீரர்களான வியியன் ரிச்சார்ட், கிறீனிட்ஜ் ஆகியோரும், அதிவேக பந்து வீச்சாளர்களான ஜொயல் கார்னர், ருேபேர்ட்ஸ், லரி கோமஸ் ஆகியோரும் மே. இந்திய அணியில் இடம்பெறுகின்றனர்.

நான்கு புதியவர்களும் இந்த டெஸ்டில் ஆடவுள்ளனர். வயதில் குறைந்தவர்களான இவர்களின் பெயர்கள் வின்ஸ்டன் டேவிஸ், ஜெவ் டுஜோன், அகஸ்டின் லொஜி, தெல்ஸ்டன் பெய்ன் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

துடுப்படி வீரர் வியியன் ரிச்சார்ட் கடந்த மாதங்களில் பயிற்சிபெறவில்லை. குளியலின்போது வீழ்ந்ததினால் தொடையில் 'நோ' ஏற்பட்டிருந்ததே அதற்குக் காரணம். தற்போது அந்த நோவுக்குப் போடப்பட்டிருந்த கட்டு அவிழ்க்கப்பட்டு டெஸ்ட் பந்தயத்திற்குத் தயாராக அவர் இருக்கிறார்.

இது இவ்வாறிருக்க, புதிய காப்டன் கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி, ஜமெய்க்காவில் விளையாடிய சாதாரண கிரிக்கெட் ஆட்டமொன்றில் படுமோசமாகத் தனது ஆட்டத்தை ஆரம்பித்தது.

முதலாவது இன்னிங்ஸில் 185 ஓட்டங்களுடனேயே இந்திய அணி ஆட்டமிழந்தது. ஆனல் ஜமெய்க்கா அணி, ஒரு விக்கட் நட்டத்துக்கு 79 ஓட்டங்களைப் பெற்றது. [கி]

## இந்திய பாராளுமன்றத்தின்

# கூட்டத் தொடரை எதிர்க்கட்சிகள்பகிஷ்கரித்தன

புதுடில்லி, பெப். 19

இந்திய பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத் தொடரை லோக சபை, இராஜ்ய சபையைச் சேர்ந்த ஆறு பிரதான எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்தன.

இக்கூட்டத் தொடரிலேயே ஜனாதிபதி ஸெயில்சிங் உரை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் உரையைக் கேட்காது கூட்டத்தொடரைப் பகிஷ்கரித்த எதிர்க்கட்சிகள், தமது பகிஷ்கரிப்புக்கு அஸாம் நிலவரங்களைக் காரணம் காட்டின.

அஸாம் மாநிலத்தில் வன்முறைகளால் இதுவரை 250 பேர்வரை பலியாகியுள்ளனர் என்றும், ஆளுங்கட்சி இந்த விடயத்தை அசட்டைசெய்து வருவதாகவும் அவை சுட்டிக்காட்டின. (கி)

## தமிழ் ஆக்கங்களுக்கான

# சாகித்தியப் பரிசுகள் அடுத்த மாதம் ஜே. ஆர். வழங்குவார்

(வெள்ளவத்தை)

தமிழ் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படவிருக்கும் சாகித்திய மண்டலப் பரிசுகள் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அடுத்த மாதம் வழங்கப்படவிருக்கிறது

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு வழங்கப்படவிருக்கும் சாகித்திய மண்டல 'தமிழ்ப் பரிசுகளைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு வழங்கவிருக்கிறது இதற்கான நூல்களை அமைச்சின்கீழ் இயங்கும் தமிழ் இலக்கிய மதியுரைக்குழு தெரிவு செய்தது.

தமிழ் எழுத்தாளர்களுக்கு சாகித்தியப் பரிசுகளை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன வழங்குவார்.

யாழ்ப்பாணத்தில் சில இலக்கிய அமைப்புகள் சாகித்திய மண்டலப்பரிசுகளை பகிஷ்கரிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியது. ஆனல் பரிசை பெறப்போகும் பெரும் தொகையான எழுத்தாளர்கள் பரிசைபெறப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

பரிசு பெறப்போகும் எழுத்தாளர்களை சிறப்பாக கௌரவிக்க கொழும்பிலுள்ள 22 இலக்கிய பத்திரிகை நண்பர்கள் கழகம் ஏற்பாடு செய்து வருகின்றது. அத்துடன் பரிசுப் பெறப்போகும் எழுத்தாளர்கள் பற்றிய புகைப்படத்துடன் வாழ்க்கை குறிப்புகளை கொண்ட நூல்ஒன்றை வெளியிட உள்ளது. (அ)

## வவனியாவில்

# உழுந்து கொள்முதல்செய்ய வெளிநாட்டு நிறுவனம் முகாம்

(வவனியா)

இவ்வருடம் வவனியாவில் பெருமளவு உழுந்து விளைந்துள்ளது

உழுந்து கொள்வனவுசெய்வதற்காக வெளிநாட்டு வர்த்தக நிறுவனமொன்று இங்கு வந்திருப்பதாகவும் தெரியவருகிறது. நேரடியாகவே கொள்வனவுசெய்ய இந்த நிறுவனம் தற்போது இங்கு முகாமிட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது

தினமும் சந்தைக்கு நாலாபக்கங்களிலிருந்தும் உழுந்து வந்தவண்ணம் உள்ளது.

சில வேளைகளில் உழுந்தின் கொள்முதல் விலை கூடிக்குறைந்து வருவதால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

# ரூ.7லட்சம்செலவில் மன்னாரில் பஸ் நிலையம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் 7 லட்சம் ரூபா செலவில் நவீன பஸ் நிலையம் ஒன்று மன்னாரில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான வரைபடமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந் நவீன பஸ் நிலையத்தில் உள்ளூர், வெளியூர்களுக்கான பஸ்தரிப்பு நிலையங்கள் உள்ளூர், வெளியூர் பிரயாணிகள் தங்குமிடங்கள், பஸ் ஊழியர்கள் தங்குமிடம், பஸ் நடத்துனர்கள் பஸ் ரிக்கற் விற்பனை மூலம் கிடைத்த பணத்தை செலுத்துமிடம், பருவகாலச் சீட்டுக்கள் பெறுமிடம் ஏனைய தேவைகளுக்கான அலுவலங்கள் என்பன அமைக்கப்படும்.

அத்துடன் நவீன பஸ் நிலையத்தில் 80 ஆயிரம் ரூபா செலவில் நவீனமலசல கூடமும், ஒரு கிணறும் அமைக்கப்படவுள்ளது.

மன்னாரில் போக்குவரத்து அமைச்சினால் ஆறரை லட்சம் ரூபா செலவில் நவீன பஸ் நிலையம் அமைப்பதற்காக 1980 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

போக்குவரத்துஅமைச்சினால் நவீன பஸ் நிலையம் அமைக்கவென ஆரம்பத்தில் ஒன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. [வெ]

## உருத்திரபுரத்தில் விவசாயிகள் விழா

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் கிழக்கு பாரதி இளம் விவசாயிகள் கழகத்தினர் விவசாய விழாக் கொண்டாடினர்கள்.

சந்திரோதய சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பிரஸ்தாப கழகத் தலைவர் திரு. வே. சிவலிங்கம் தலைமை தாங்கினர். பிரதம விருந்தினர்களாக திரு. வி. ஆனந்தசங்கரி எம். பியும் சமூக சேவையாளர் திரு. இ. கிருஷ்ணராசா, திரு. சீ ஜெயரத்தினம், விவசாய உத்தியோகஸ்தர்கள் திருவாளர்கள் எஸ். பொன்னையா, கே. குமாரசர்மி, உதவி அரசாங்க அதிபர் கே. சுப்பிரமணியம், விசேட

[5-ம் பக்கம் பார்க்க]

## புதுக்குடியிருப்பு கொலை:

# கைமோசக் கொலைஎன எதிரிகள் ஒப்புக்கொண்டனர்

[வவனியா]

புதுக்குடியிருப்பு கதிரிப்பிள்ளை கொலை வழக்கில் கைமோசக் கொலை என எதிரிகள் ஒப்புக்கொண்டனர். எதிரிகளுக்கு ஐந்து வருட ஒத்திவைத்த இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இக் கொலை வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே. ஜி ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1980-ம் ஆண்டு மாசி 10-ம் திகதி புதுக்குடியிருப்பு என்னுமிடத்தைச் சேர்ந்த கிருஷ்ணனந்தன் கதிரிப்பிள்ளை என்பவரைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த சிவம் விவேகானந்தன், சதாசதாசிவம் யோகானந்தன் என்பவர்களுக்கு எதிராக இவ்வழக்குத் தாக்கலாகியிருந்தது.

விசாரணையின்போது எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினமும், அரசதரப்பில் சட்டத்தரணி ஐ. ஞானதாசனும் ஏற்பட்டிருந்தார்கள். [அ]

யாழ். நகரில் நாளை ஆரம்பமாகும் 5 நாள் மாநாடு'

# பனம் பொருள்களுக்கு உலக சந்தைவாய்ப்பைஏற்படுத்தும்

## பனை அபிவிருத்திச் சபை தலைவர் பத்திரிகையாளர்களிடம் தகவல்

ஏ. வி. மாணிக்கம்]

பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்கவும், பனம் பொருள்களை உலகில் சந்தைப்படுத்தும் ஒருவாய்ப்பை ஏற்படுத்தவும் நடைபெறவிருக்கும் பனை வளத் தொழிற்பாட்டு மகாநாடு வழி அமைக்கும் என்று பனம் பொருள் அபிவிருத்திசபைத் தலைவர் திரு. க. நடராசா பத்திரிகையாளச் மகாநாட்டில் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய நிறுவனமும் பனம் பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து அகில உலக தொழிற்பாட்டு மகா நாட்டையும் பனம்பொருள் கண்காட்சியையும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் 25ம் திகதிவரை தொடர்ந்து நடாத்துகின்றன.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அகில உலக பனை வளத் தொழிற்பாட்டு மகாநாடும் யாழ். நகர மண்டபத்தில் பனை வளக்கண்காட்சியும் நடைபெறவுள்ளன.

இதனை முன்னிட்டுப் பனம் பொருள் அபிவிருத்திசபைத் தலைவர் திரு.க நடராசாதமது பணி மனையில் பத்திரிகையாளர் மாநாடு கூட்டி பனைவளத் தொழிற்பாட்டு மகாநாடு சம்பந்தமான செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்.

பனம் பொருள் அபிவிருத்தி சபையின் பொதுமுகாமையாளர் கலாநிதி மோகனதாசும் இம்மகாநாட்டில் சமுகமளித்திருந்தார்.

திரு. நடராசா மேலும் தெரிவிக்கையில், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் பனைவளத் தொழிற்பாடு மகாநாட்டில் முதல் மூன்று தினங்களுக்கு பனை வளத்தினைப் பற்றி பலவழிகளிலும் ஆராய்ந்து துறைபோன உள்நாட்டு வெளிநாட்டுப் பெரியார்கள் சுமார் நூறுபேர் ஆய்வுரைகள், கருத்துரைகள் வழங்கவுள்ளனர் என்றும், பார்வையாளர்களாக சுமார் 500 பேர் கலந்து கொள்வார்கள் என்றும் சொன்னார்.

### வெளியிடங்களில் ஆய்வு

இறுதி இரண்டு தினங்களான 24, 25ம் திகதிகளில் பனம் பொருள் சம்பந்தமான ஆராய்ச்சியாளர்கள் வெளி ஆய்வுகளில் ஈடுபடவுள்ளனர் என்று குறிப்பிட்ட தலைவர் திரு. நடராசா, பனை வளப்பூமிகளான யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, புத்தளம், அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச்சென்றுபனைவளங்கள் குறித்து ஆய்வார் என்றார்.

25-ம் திகதி மகாநாட்டு முடிவில் ஆய்வுகள் சம்பந்தமான பூர்வாங்க அறிக்கை ஒன்று வெளியிட்டு வைக்கப்படும் என்று அவர் சொன்னார்.

### கண்காட்சியும் மலிவு விற்பனையும்

வீரசிங்கம் மண்டபத்தில் மகாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும் அதே வேளை, யாழ். மாநகர மண்டபத்தில் பனை வளக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் பிரமாண்டமான முறையில் நடாத்தப்படவுள்ளன என்று திரு. நடராசா தெரிவித்தார்.

### நவீன உணவுகள் தயாரிக்கும் பயிற்சி

கண்காட்சி சம்பந்தமாக அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"இம்மாதம் 24ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அகில இலங்கை இலத்தரசிகள் சங்கத்தின் ஆதரவில் கொழும்பு மனையியல் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சுகமா சோமசேகரம், பனம் உற்பத்திப் பொருட்கள் மூலம் பல்வேறு நவநாகரிக உணவு வகைகள் தயாரிக்கும் செயல்முறைகள்பற்றிப்பயிற்சி யளிப்பார். பாடசாலை மனையியல் மாணவிகளுக்கும் மற்றும் பாடசாலை மாணவ-மாணவிகளுக்கும் கண்காட்சியில் விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

"யாழ் மாவட்டத்தில் பனம்பொருள் பயிற்சிபெற்ற மாணவர்களுக்குமகாநாட்டின் இறுதிநாளான 25ம் திகதி தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும். அன்றிரவு அதி விசேஷ கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன. கலைஞர் வேலானந்தன் குழுவினரால் 'பஞ்சத்துக்குப் பனை படைத்த பரமன்' என்ற நாட்டிய நாடகம் முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது.

### விசேஷ பஸ்சேவை

மகாநாடு, கண்காட்சி ஆகியன நடைபெறுவதையொட்டி 5 நாட்களும் இரவு 10-30 வரை விசேஷபஸ் சேவைநடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கலாநிதிமோகனதாஸ் இந்த மகாநாடு குறித்து கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:-

"பனை தமிழர்கள் வாழும் மாவட்டங்களில் இயற்கையாக வளர்ந்து பயன்தரும் கற்பகதருவாக விளங்குகின்றது. உணவு-கட்டிடப் பொருட்களுக்குப் பனம்பொருள் உதவுவதுடன் மட்டுமல்ல. நவநாகரிகமான பொருட்கள் தயாரிப்பதற்கு மூலப்பொருளாகவும் இருக்கிறது.

.'விஞ்ஞானரீதியாக நவீன முறையில் பனம் பொருட்கள் உருவாக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அவை உலக சந்தையில் தரமானதாக இருக்கும்.

இந்தியா, இந்தோனேஷியா, பர்மா,மலேசியா தாய்லாந்து, பங்களாதேஷ், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் பனை உற்பத்தியில் புதியஇனங்களைக் கண்டுபிடித்ததுடன், பனம் பொருட்களும் புதிதான வகைகளில் உருவாக்கிவருகின்றார்கள். ஆதலால் இந்த மகாநாட்டிலும் அந்த நாடுகளின் பனம்பொருள் உற்பத்திஆய்வுகள் குறித்து ஆராயப்படவிருக்கிறது.

இம்மகாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கை-இந்திய-இந்தோனேஷிய அறிஞர்கள் தயாரிக்கும் அறிக்கைகள், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய நிறுவனத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, திட்டமிட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும், இலங்கையின் சார்பில் விவசாய ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, கிராமிய அபிவிருத்திச் சபை, பிரதேச அபிவிருத்திச் சபையின் பிரதிநிதிகள்-திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனம், தென்னை ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், யாழ். மாவட்டத்திலுள்ள உயர் அதிகாரிகள், யாழ். பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறை விரிவுரையாளர், பேராசிரியர்கள் ஆகியோரும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்துவர்

இந்நாட்டில் பனைவளத்தோடு சம்பந்தப்பட்ட எட்டு மாவட்டங்களிலுமுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அபிவிருத்தி சபைகளின் தலைவர்களும் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்'' என்றார். (மா)

## பருத்தித்துறை சேவாச் சிரமத்தில் ஸ்ரீராம கிருஷ்ண விவேகானந்த இளைஞர் மாநாடு

கல்கத்தா ஸ்ரீராம கிருஷ்ண மிஷனின் வேண்டுகோளுக்கிணங்கி இப்பேர்ப்பட்ட மகாநாடுகள் இந்தியாவின் பலமாநிலங்களில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக சென்னை, டெல்லி, கல்கத்தா போன்ற இடங்களில் பல இளைஞர்கள் கலந்து பயன்பெற்றுள்ளார்கள்.

இதற்மைய யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 20-ம் திகதி அன்றும் அடுத்த மாதம் 20ம்திகதி அன்றும் இம்மாநாடு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இன்றைய இளைஞர்களின் தலையாய பங்கு, இவர்களின் எதிர்காலம் யாவும் செம்மையாகத் திகழ ஆத்மீக விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும். சமயம் என்பது வெறும் சடங்காக இருக்கக்கூடாது. ஒரு இனத்தின் முன்னேற்றம் அவ் இனத்தின் உயரிய நோக்கங்களைக் கொண்டுள்ளது

பாரத நாட்டில் சமய, ஆத்மீக விழிப்புணர்ச்சிக்கு எல்லை இல்லை. ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமிவிவேகானந்தர், அன்னை ஸ்ரீசாரதாதேவி, தமிழ்நாட்டில் வடலூர் வள்ளலார், அரவிந்தர், ரமணர் போன்றவர்களின் சமய ஆத்மீக பங்கு அளவிடற்கரியது.

நமது நாட்டில் கடமை, கட்டுப்பாடு, ஒழுக்கம் தளர்ந்த காரணத்தாலதான் நம் மக்களிடையே சாந்தியும் மன அமைதியும் இல்லை. ஒருபுதிய சமுதாயத்தை ஆக்கும் பணி இன்றைய இளைஞர்களின் கையில் இருக்கிறது.

மாணவர்களின் பணி தலையாயது. இவர்கள் அரசியல் சார்பற்று. தம்தம் மதத்தில் பற்றுக்கொண்டு, சீரியவாழ்வு வாழ ஆசைப்படவேண்டும். படித்த மாணவர்கள் கஷ்டப்படும் மக்களுக்கு எந்தமுறையிலும் சேவை செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் கவனம் செலுத்தி இம்மாநாடு நடாத்தப்படுகின்றது.

சுவாமிசித்ரூபானந்தா

## சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் மங்கா விளக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் மங்கா விளக்காக கடந்த 20 ஆண்டுகள் கடமையாற்றி அண்மையில் அமரத்துவம் அடைந்த ஆசிரியை செல்வி நவீனா கனகதுங்கம் சாவகச்சேரி மக்களின் மனத்தில் கோபுரமாக உயர்ந்து நிற்கிறார். காரணம் அன்னாரின் அயராத உழைப்பும் அரும்பெரும் பண்புகளுமாகும். எடுப்பான தோற்றம், அருள் ஒழுகும் விழிகள், யார்மாட்டும் அன்புடன் பழகும்பண்பு, புகழ் விரும்பாத பொதுநலப்பணி பகைவனையும் பணியவைக்கும் கனிந்த சுபாவம், வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியக் கூடாது என்ற கொள்கை, இளகிய நெஞ்சம் இறைபக்தி, மதப்பற்று, அதேவேளையில் எம்மதத்தையும் மதிக்கும் உயர்ந்த பண்பு, குறைகண்ட இடத்து இன்சொல்லால் இடித்துரைத்து நல்வழிப்படுத்தும் இயல்பு, அஞ்சா மனத்திடம், துடுக்கான பேச்சு, மிடுக்கான பார்வை இவற்றின் இருப்பிடமாக பண்பால் உயர்ந்து பழகும் முறையால் யாவரையும் கவர்ந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றின் அடிச்சுவட்டில் உயர்ந்த உள்ளத் தூய்மை மிக்க உத்தமியாக எல்லார்க்கும் நல்லவராக வாழ்ந்த பெருமை அவருடையது.

கல்லூரிச்சேவையோடு சாவகச்சேரி திருச்சபை சார்பில் ஞாயிறு வகுப்புக்களை நயம்பட நடத்தி, இளம் தலைமுறையினரை ஆத்மீகத் துறையில் செவ்வனே வழி நடத்தினார். கடைசிக்காலத்தில் சபையின் பொருளாளராகத் திகழ்ந்து உடல் நோய் வாய்ப்பட்டிருந்தும் உள்ளத்தில் அயர்வின்றித் தம்பொறுப்பை இறுதிவரை பூரணமாக நிறைவேற்றினார். அவரின் மறைவு கல்வித்துறைக்கும் சமயத்துறைக்கும் ஓர் பேரிழப்பாகும்.

''செயற்கரிய செய்வர் பெரியர்'' என்பதில் தனக்கென ஒருதனித்துவத்தை நாட்டிச் சென்றார். நன்மை பல புரிந்து, திறம்பட வாழ்ந்து புகழ் சொட்டச் சொட்ட மறைந்த அன்னாரின் இறுதி யாத்திரையே அவரின் புகழுக்குச் சாட்சி. ஆலய மூன்றலில் ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம். ஆருத்துயருடன் அனைவரும் கண்ணீர் பெருகினர். அஞ்சலியில் கலந்து கொண்ட பள்ளிச் சிறார்களில் பாசம் பரராட்டாதிருக்கமுடியாது. வெண்மையான சீருடையில் தூய வெண்கொடி பிடித்து, அரைக்கம்பத்தில் பறக்கவிட்ட கல்லூரிக் கொடியை, சோகத்தில் வெதும்பிய தோற்றத்துடன் ஐநூற்றுக்குமேற்பட்ட மாணவிகள் கொண்டு சென்ற காட்சி உள்ளத்தை உருக்குவதாகும். இறுதி அஞ்சலியில் இடம்பெற்ற இரங்கலுரைகள் கல்லையும் கனிய வைத்தன. கல்லூரி அதிபர் கண்ணீர் சிந்தியபடி தன்னைக்கற்பித்த ஆசிரியை நவீனாவைப்பற்றிக் கூறிய கருத்துக்கள் கல்லில் எழுதப்பட்டதுபோல் நெஞ்சில் நிலைத்துவிட்டன.

புகழ்மணத்தோடு தேவனின் மோட்சராச்சியத்தில் காலடி வைத்த பெருமை யாருக்குத் தான் கிடைக்கும்.

மகளிர் கல்லூரியினர்

வடபகுதி மக்களே! உங்கள் தேவை எதுவானாலும் சிரமமின்றி இலகுவாக பெறுவதற்கு பிரபல்யம் பெற்ற நிறுவனம்அம்பலவாணர் அன் சன்ஸ்

பாடசாலைஅப்பியாசக்கொப்பிகள்-உபகரணங்கள்-மின்சாரவிசிறிகள்-றேடியோக்கள் - மணிக்கூடுகள் - அன்பளிப்புஅலங்காரப்பொருட்கள்-மின்சார உபகரணங்கள்-திருமண அழைப்பிதழ்-பேப்பர் றே-கப்

அனைத்திற்கும் நகரில் நற்பெயர் பெற்றவர்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள் - மின்ஒப்பந்தகாரர்)

196 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24291

தலைமையகம்;

பேர்ள் லேட்ஸ்-அம்பலவாணர் அன் சன்ஸ், 79, மலிபன் வீதி கொழும்பு. போன்: 24821—28?44

லெட்சுமிபவான் 97, ஓல்ஹொட் மாவத்தை கொழும்பு. போன்: 24821

பெருமளவில் கையிருப்பிலுண்டு

இறக்குமதி செய்யப்பட்ட

★ பிளைவூட் சீற்

★ டெக்கறேட்டட் பிளைவூட் சீற் (வர்ணம் பூசிய)

★ அலங்கார கதவு

அனைத்திற்கும் நற்பெயர் பெற்ற நிறுவனம்

நாபன்ஸ் டிரேட்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 24162

சிறந்த முறையில், நவீன டிசைன்களில்
"ரெருசோ மாபிள் நிலம்"
அமைக்க நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்

**த ரெருசோ கொன்ருக்ரேஸ் &கொன்சல்ரன்ஸ்**

THE TERRAZZO CONTRACTORS AND CONSULTANTS

69, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

Specialist in Terrazzo
Flooring According to CP 204


# நெஞ்சம் மறப்பதில்லை



ஈழவள நாட்டின் புனித சின்னப்பரசாகத் திகழ்ந்து, கன்னித் தமிழுக்கும். கத்தோலிக்கத் திருமறைக்கும் அயராது பணியாற்றிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வலது கரமாகத் திகழ்ந்தவர் சட்டம்பியார் திரு. ஆ. அந்தோனிப்பிள்ளை அவர்கள். இவர் யாழ் திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்து உபதேசியாராகவும், பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் அரை நூற்ருண்டுக்குமேல் பணிபுரிந்துள்ளார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அமுதவாக்கைத் தாரகமந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர்.

சமயம் வார்த்தையில்லை வாழ்க்கையில் என்பதற்கு எடுத்துக் காட்டாகச் சட்டம்பியார் வாழ்ந்து காட்டினுர். இவரின் அன்பின் சேவையினுல் அன்பர்களின் உள்ளத்தில் அழியாத இடத்தைப்பெற்றுள்ளார்.

துு. ஆரோக்கியதாசன்

# ஒரு லட்சம் ரூபா மருந்துவகைகள்

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த அரசினர் இலவச ஆயுள்வேத வைத்திசாலைக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் வழங்கப்பட்டுள்ளது.

இம்மருந்து வகைகள் எருக்கலம்பிட்டி, அடம்பன் ஆகிய அரசினர் இலவச ஆயுள்வேத வைத்திய சாலைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது.

## உருத்திர...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை அலுவலர் திரு. பொ. யோகேந்திரன். கிராமசேவை அலுவலர் திரு. ஆர். தியாகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கவிஞர் அ. எமிலியானுஸ் தலைமையிலான கவியரங்கமும் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் சிறப்பம்சங்களாக இடம்பெற்றன. விவசாயிகள் கழகச் செயலாளர் செல்வி ப. றஞ்சி, விவசாயப் போதனாசிரியர் மு. சோமசுந்தரம் ஆகியோர் உரையாற்றினுர்கள். [அ]

# மயிலிட்டியில் மீனவர் தங்குமிடம்

(மயிலிட்டபுரம்)

மயிலிட்டியில் மீனவர்களுக்கான தங்குமிடம் ஒன்று 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

மயிலிட்டி மீன்பிடித்துறை மூகப்பகுதியில் மீனவர் தங்குமிடம் ஒன்று இல்லாதிருந்தது. இதனுல் மீனவர்கள் சிறு கொட்டில்களை அமைத்துத் தங்கியிருந்தே தமது தொழிலை நடத்த வேண்டியிருந்தது. கடற்கரையில் இளைப்பாறவும், வலைகளை செப்பனிடுவது தொடர்பான வேலைகளை மேற்கொள்ளவும் மீனவர் தங்குமடம் ஒன்றில்லாமை பெருங்குறையாக இருந்து வந்தது.

இதனைத் தொடர்ந்து காங்கேசன்துறை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கம் 50 ஆயிரம் ரூபாவை புதிய தங்குமிடத்துக்கென ஒதுக்கிக் கொடுத்திருந்தார். (கி)

# யாருடையது

யாழ்ப்பாணம் மானிப்பாய் ரோட்டில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வையொன்றினை திரு சே. ஸ்ரீபாலன் என்பவர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.


**ரஸ்ற் ரவல் சேர்விஸ்**
**Trust Travel Service**

உலகின் நீங்கள் விரும்பிய எப்பகுதிக்கும் பிரயாணம் செய்வதற்கு
குறைந்த செலவில் விமான டிக்கட்டுகள்
பெற்றுத் தருபவர்கள்
அத்துடன்

- ✶ இந்திய விசா அனுமதி
- ✶ பாஸ்போட் கால நீடிப்பு
- ✶ இலவச பிரயாண ஆலோசனைகளுக்கு

உடனே நாடுங்கள்!

யாழ் நகரில் — தலைமை கட்டிடம்

ரஸ்ற் ரவல் சேர்விஸ்
TRUST TRAVEL SERVICE
மொம்சாக் கட்டிடம்,
11/A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

K.MAHENDRAN,
**Trust Travels**
Hidramany Arcade,
65, Chatham St.
Fort.





# வளரும் பருவத்தில் தவருது பருகவேண்டிய நெஸ்பிறே.

உலகெங்கிலும் தமது அன்புக் குழந்தைகளின் நலனில் அக்கறையுள்ள தாய்மார் நெஸ்பிறே பாலையே அவர்களுக்குக் கொடுக்கிருர்கள். ஏனெனில், நெஸ்பிறே உலகின் வளம் மிக்க பண்ணைகளில் இருந்து கிடைக்கும் சுத்தமான, சத்துமிக்க பாலில் தயாரிக்கப்படுகின்றது. நெஸ்பிறே சர்வதேச தராதரங்களுக்கேற்ப மிகச் சுகாதாரமான முறையில் பொதிசெய்யப்படுகின்றது. பாலின் புரதச் சத்துகளும் விற்றமின்களும் அதில் நிறைந்துள்ளன.

உங்கள் பிள்ளையை நெஸ்பிறேயில் வளருங்கள். காலை, மாலை, பகல்... எவ்வேளையும்... பசியோ தாகமோ ஏற்படும் எல்லா நேரத்திலும் அவர்கள் நெஸ்பிறே பருகட்டும் நித்திரைகொள்ளும் முன்பும் நெஸ்பிறே கொடுங்கள். தினமும் ஓடியாடிச் சுறுசுறுப்பாக வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்பிறே சக்தியை வழங்குகின்றது. உங்கள் பிள்ளைகள் ஆசையோடு பருகி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் வளர்வதைக் கண்டு மகிழுங்கள். இன்றே உங்கள் பிள்ளைக்கு நெஸ்பிறே கொடுங்கள்.






400 Grams Rs 26/90 800 Grams Rs 98/25

Nestlé
ஒரு நெஸ்லே தயாரிப்பு

# நெஸ்பிறே®

வளரும் பருவத்திற்கு வாய்த்த பால்.

Grant K & E 4787

# அடுத்த நடவடிக்கை குறித்து
# யாழ். பல்கலைக்கழக மாணவர் நாளை கூடி ஆராய்வர்

[illegible]

இ[illegible]ணாவிரதப் போராட்டத்தை ஒத்தி வைத்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், அனைத்திலங்கை பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஆலோசனையைப் பெற்ற பின்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நாளை திங்கட்கிழமை கூடி ஆராயவுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கும், மதகுருமார், விரிவுரையாளர் தம்பதிகள், வைத்தியர், பல்கலைக்கழக கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரை விடுதலை செய்ய வேண்டும் அல்லது சாதாரண சட்டத்தின்கீழ் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக மாணவர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் 8 நாட்களுக்கு இருகட்டங்களாக உண்ணாவிரதம் இருந்தனர்.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தரும், யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசாவை அழைத்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழக மாணவரையும் மற்றும் மாணவரையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்து மாணவர்கள் தமது நடவடிக்கைகளை இருவாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

இது சம்பந்தமாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை நடவடிக்கைக் குழு நேற்றுமுன்தினம் கூடி இரு மணித்தியாலங்களாக ஆலோசனை நடாத்திய போதிலும் எதுவித முடிவும் எடுத்ததாகத் தெரிவிக்கப்படவில்லை.

இன்று கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் அவைக் கூட்டத்தின் முடிவைப் பொறுத்தே மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதென்று தீர்மானிக்கப் போவதாகவும் நாளை திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் மாணவர் அவைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெறும் அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் அவைக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் கலந்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## வேம்படி கோஷ்டி மோதல் சமாதானத் தீர்வு

(கரவெட்டி)

பருத்தித்துறை பொலிஸ்பகுதியிலுள்ள வேம்படி என்னும் இடத்தில் நடந்த கோஷ்டி மோதல் சமாதானமானமுறையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இரு பகுதியினருக்கிடையே நடந்த இக்கோஷ்டி மோதலில் நால்வர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டதுடன் பருத்தித்துறைப் பொலிசிலும் இதுபற்றிப் புகார் செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பரபரப்பான நிலை ஏற்படாது இரு கோஷ்டியினருக்கும் இடையே கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு இ. ஐயாத்துரை சமாதான முறையில் இணக்கத்தை ஏற்படுத்தி அப்பகுதியில் சமாதானமும், அமைதியும் நில[illegible] செய்து[illegible]ளார்.

(ச)

## சர்வதேச மகளிர் தினவிழா

(பண்டத்தரிப்பு)

சுதுமலை கிராமோதய சபை சர்வதேச மகளிர்தினவிழாவை அடுத்தமாதம் 8ம் திகதி கொண்டாடுவது என்று தீர்மானித்துள்ளது.

இதற்கான ஒழுங்குகளை சபையின் செயலாளரும் விசேட சேவை உத்தியோகத்தருமான திரு சி.பொ.யோகராசா மேற்கொண்டுள்ளார்.

## நெல்களஞ்சியங்கள் காப்புறுதி

(மன்னார்)

மன்னார் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நெல்களஞ்சியங்கள் யாவும் காப்புறுதி செய்யப்படவுள்ளன.

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரேட்
போன்:23199

யாழ்ப்பாணம்.
தந்தி; வைரம்

இதோ!

ரேடியன்ட் பார் சோப்




ரேடியன்ட் சலவை சோப், அதிக சலவைச் சக்தி செறிந்தமையால், துணிமணிகளைக் குறைந்த உழைப்புடன் அதிக விரைவில் கழுவ உதவும். தூய இயற்கைச் சேர்வம்சங்கள் கொண்டு இதமான வாசனையுடன் உருவான ரேடியன்ட், உங்கள் ஆடைகளும் வீட்டுத் துணிமணிகளும் அதிக வெண்மையும் அதிக பிரகாசமும் பெறச் செய்யும். ரேடியன்ட் கவர்ச்சித் தோற்ற உறையில் கிடைக்கும்.

சகல துணிமணிகளுக்கும்
அசல் வெண்மையும்...
அசல் பிரகாசமும்...
ஊட்டி.புதிய பளபளப்பான
தோற்றத்தை வழங்கும



ரேடியன்ட் பார் சோப் அதி வெண்மைச் சலவை
அதி பிரகாச சலவை

விநியோகஸ்தர்கள்:
யுனிவர்சல் மார்க்கெட்டிங் சேவிசஸ்

RJA 3297

# "கதிரேசு வயிற்றில் இரத்தக் காயத்துடன் இறந்துகிடந்தார்'

## மயிலிட்டி முன்னாள் விதானையார் கொலைவழக்கில் சாட்சியம்

[மாவிட்டபுரம்]

"நடுஇரவுநேரம்வெடிச்சத்தமும், அதையடுத்து ஆட்கள் குளறும் சத்தமும் கேட்டது. அச்சத்தம் கேட்டு நான் ஓடிச் சென்றேன் முன்னாள் விதானையார் கதிரேசு வயிற்றில் இரத்தக் காயத்துடன் அவரது வீட்டின் ஹோலில் இறந்து கிடந்தார்."

இவ்வாறு மயிலிட்டி முன்னாள் விதானையார் கின்னப்பு கதிரேசு கொலை வழக்கில் சாட்சியமளித்த தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிளை முகாமையாளராகவிருக்கும் சுப்பிரமணியம் பொன்னுத்துரை கூறினார்.

இக்கொலைவழக்கில் மயிலிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி யோகநாதன் இரத்தினபுரி மில்லவெட்டிய தோட்டத்தைச் சேர்ந்த பிச்சைமுத்து சுகுமார் ஆகியோர் எதிரிகளாவர்.

விதானையாரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் சுப்பிரமணியம் பொன்னுத்துரை மேலும் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

"இறந்த கதிரேசு என்னுடைய சகலன். இறந்தவரின் வீட்டுக்கண்மையில் நான்வசிக்கிறேன். 1-ம் எதிரியை எனக்கு 15 வருடகாலமாகத் தெரியும். எனது வீட்டில் இருந்து காக்மைல் தொலைவில் அவர் வசிக்கிறார். இரண்டாம் எதிரியையும் எனக்குத் தெரியும் இறந்தவர் வீட்டில் உதவியாளராக இவர் இருந்து வந்தார், சம்பவத்திற்கு 4, 5 மாதத்திற்கு முன் இவர் இறந்தவரால் வேலையிலிருந்து விலத்தப்பட்டார்.

சம்பவதினம் நான் நித்திரையிலிருந்த சமயம் நடுஇரவு நேரம் வெடிச்சத்தமொன்றும் அதையடுத்து ஆட்கள் குளறும் சத்தமும் கேட்டது. நான் சத்தம் வந்த திசையிலிருந்த இறந்தவரின் வீட்டுக்கு ஓடினேன். அங்கு கதிரேசு வயிற்றில் இரத்தக் காயத்துடன் இறந்து கிடந்தார்: மேலும் பலர் நின்றனர். யாரோ சுட்டுப் போட்டு போகிறார்கள் என இறந்தவரின் மகள் நவமணிதேவி கூறினார். பின்புஒரு மெல்லிய ஆளும் வேலைக்காரனும் சுட்டுப்போட்டுப் போனதாகச் சொன்னார்கள். யாரையாவது பொலிசாருக்கு செல்லுமாறு கூற நான் காங்கேசன்துறை பொலிசிற்கு சென்றேன், பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற சமயம் அங்கு வெளிச்சம் இல்லாது இருண்டதாக இருந்தது. அதனால் பயந்து திரும்பிவிட்டேன், பின் காலையிலேயே பொலிஸிற்கு சென்று தகவல் கொடுத்தேன்' என்றார்.

குறுக்குவிசாரணையில் சாட்சி கூறியதாவது:-

"கொலை வழக்கில் பொய்ச் சாட்சி சொன்னால் என்ன நடக்கும் என்பது தெரியும். நான் இங்கு பொய்ச் சாட்சி சொல்லவில்லை. சுட்டவர்கள் யாரென்று இறந்தவரின் மகளிடம் இரகசியமாகக் கேட்ட போதே அவர் மெல்லிய ஆளும், வேலைக்காரனும் சுட்டார்கள் எனக் கூறினார். அதுபற்றி நான் எனது வாக்குமூலத்தில் எதுவும் கூறவில்லை. பொலிசார் யார் சுட்டதென்று கேட்ட போது எனக்குத் தெரியாது என்றேன் சுட்டவர்களை கண்டுபிடித்து பொலிசாரிடம் ஒப்படைப்பதற்கு பயம் காரணமாக விரும்பவில்லை. இதுபற்றி பொலிசாருக்கு மொட்டைக் கடிதம் ஒன்றும் நான் எழுதவில்லை. இன்று நீதிமன்றத்தில் தெரிவிக்கும் விடயங்களைபயத்தின் காரணமாகவே அன்று பொலிசாரிடம் தெரிவிக்கவில்லை" என்றார்.

இதையடுத்து நீதிபதி மார்ச் மாதம்7ம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி கே. உலகநாதனின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினமும், 2ம் எதிரி சார்பில்சட்டத்தரணி செல்லத்துரையும்ஆஜராகினர்.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி திருமதி கமலசொர்ணலிங்கத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஜே.செல்வரத்தினம் ஆஜரானார்,

காங்கேசன்துறை பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் கு. சீ. ஐயாத்துரை, சார்ஜன்ட் வி. தியாகராஜா ஆகியோர் வழக்கை நடத்தினர், (வெ)



கடல்வாழ் பொருள் ஏற்றுமதியில் சீ பிரஸ் மரின் எக்ஸ்போர்ட் நிறுவனம் மிகக்குறுகிய காலத்தில் பெருந்தொகை வெளிநாட்டுச் செலவாணியைச் சம்பாதித்து சாதனை புரிந்துள்ளது. இறால், கணவாய் ஏற்றுமதியில் கடந்த வருடம் இந்தநிறுவனம் நிலைநாட்டியசாதனையில்பெருமதிப்பைப்பெற்றுள்ளது. கடந்த ஜதமாதம் வத்தளையில் இந்நிறுவனத்தின் நவீன இறால் பதப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப விழாவில் ஜப்பானிலுள்ள பிரபலமிக்க மிட்சுவி கொம்பனியின் பிரமுகர்கள் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர். திரு க. கனகசபை, திரு. இரவீந்திரன் ஆகியோரே இந்நிறுவனத்தின் உரிமையாளர்கள்.


## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

# பதவி வெற்றிடங்கள்

1. நிறைவேற்று அலுவலர் (Executive officer)
2. கணக்காளர் (Accountant)

அ. கல்வித்தகைமைகளும் அனுபவமும்:

க. பொ. த ப. (உயர்தரப்) பரீட்சையில், வர்த்தகமும் நிதியும், கணக்கியல், பொருளியல், தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களுட்பட, நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்கவேண்டும். அத்துடன் குறைந்தது நான்கு வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

மேற்குறித்த கல்வித்தகைமைக்கு மேலான ஏதேனும் கல்வித் தகைமையுடன் இரண்டு வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க. பொ. த. ப. (சாதாரணதரப்)பரீட்சையில், தமிழ் மொழி, எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தக எண்கணிதம்ஆகிய பாடங்களிலும், வேறு ஏதேனும்மூன்று பாடங்களிலும் திறமைச்சித்தியுடன், ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருப்பதோடு குறைந்த பட்சம் ஐந்து வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ. வயது:

விண்ணப்ப முடிவு தேதியன்று முப்பது வயதுக்கு மேற்பட்டவராகவிருத்தல் வேண்டும்.

இ. சம்பளவிபரம்:

1. நிறைவேற்று அலுவலர் - 900 - 20 × 20 - 1300
2. கணக்காளர் - 750 - 20 × 20 - 1150

[சகல படிகளும் உட்பட]

ஈ. முக்கிய கவனிப்பு

சைவசமயிகளுக்கும், ஆங்கில மொழியறிவு, தமிழ் தட்டெழுத்தில் தேர்ச்சி ஆகியன உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

உ. பிணைப்பணம்

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ரூபா ஐயாயிரம் காசாகவும், பத்தாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த ஆதனத்தையும் பிணை தரத் தயாராயிருத்தல் வேண்டும். அறங்காவலர் சபையினர் தீர்மானிக்கும் வீதப்படி காசுப்பிணைக்கு வட்டி வழங்கப்படும்.

ஊ. குறிப்பு

விண்ணப்பங்கள் யாவும் கோவில் அலுவலகத்தில் நேரிலும் தபால் மூலமாகவும் பெறப்படக்கூடிய விண்ணப்பப்படிவங்களில் தயாரிக்கப்பட்டு 28-02-83 திங்கட்கிழமைக்குப் பிந்தாமல் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபாலில் எனக்கு அனுப்பப்படவேண்டும். அறங்காவலர் சபை நியமிக்கும் நேர்முகப்பரீட்சைக் குழுவினரின் முடிவே இறுதியானது.

நா. சிவராசசிங்கம்
செயலாளர்,
அறங்காவலர் சபை.

9-02-1983
நயினாதீவு.

6125



கடைசி சிலதினங்கள்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

வெஸ்லி (காவிப்பாடு)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
முரட்டுக் காளை

மனோகரா தினசரி
[யாழ். நகர்] 10-30, 2-15, 6-00, 9-45.
என். டி. ராமராவ், கே மாலதி, எஸ். வி. ரங்காராவ், ரேலங்கி
பாதாள பைரவி

கடைசி சில தினங்கள்
வின்ஸர் (யாழ். நகர்)
வசந்த மாளிகை
(புதிய பிரதி)

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
18 — 20 வரை
புகுந்த வீடு

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
19--25
EYE OF THE NEEDLE
Adults Only

ரீகல் (யாழ். நகர்)
கடைசி வாரம்
எங்க வீட்டுப்பிள்ளை

சாந்தி (யாழ். நகர்) Last Day 21-2-83
10-30, 2-30, 4-45, 7-00 9-30
Terence Hill—Ernest Borgnine in
Super Snooper (Action-Comedy-Color)

சில தினங்கள் மட்டும்
ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணி வேதுணை

## ஆவரங்காலில் கடத்தப்பட்ட...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

ஆவரங்கால் விவசாயி ஒருவர் நேரில்கண்ட சம்பவத்தை பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த விவசாயி அப்பகுதி கிராமசேவை அலுவலருக்கு ஜீப் வண்டி நிறுத்தப்பட்ட தகவலை தெரிவித்ததன்பேரில், அவர் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டார் என்றும் தெரிய வருகிறது.

ஜீப்புக்குள் இரத்தக் கறையும், 2 பாவிக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளும், பாவிக்கப்படாத ஒரு குண்டும் கண்டெடுக்கப் பட்டுள்ளனதாக பொலிசார் தெரிவித்தனர்.

ஜீப் முன்பக்கக் கண்ணாடி ஊடாக துப்பாக்கிச்சூட்டினால் துளைக்கப்பட்ட இரு துவாரங்களும், ஜீப் பின்பக்கத்தில் இரு துவாரங்களும் காணப்பட்டன.

இந்த ஜீப்வண்டி யாழ். பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக்காலை எடுத்துவரப்பட்டுள்ளது.

துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யட்ட பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினதும், சாரதியினதும் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்து பிரேதபரிசோதனை செய்யப்பட்டது.

சட்டவைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை செய்தார்.

கொலையுண்ட பொறுப்பதிகாரியின் தலையிலிருந்து ஒரு குண்டும். சாரதியின் உடலிலிருந்து 5 குண்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

450 இலக்க றிவோல்வரும், சப் மெஜின் கண் இக்கொலைச் சம்பவத்துக்குப் பாவிக்கப் பட்டதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது

தகவலக்கிடைத்ததும் வட பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் டபிள்யூ பி. ராசகுரு, பொலிஸ் அதிபர் ஆனந்தராஜா, மற்றும் உதவிப் பொலிஸ் அதிபர்கள், ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

### பொலிஸ் மா அதிபர்கள்

பொலிஸ்மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம், இரகசியப் பொலிஸ் பிரிவைச்சேர்ந்த பிரதி பொலிஸ்மா அதிபர் ஹேபர்ட் வீரசிங்க மற்றும் பொலிஸ் அதிபர்கள் நேற்றுக் காலை விமானமூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்

இவர்கள் துப்பாக்கிசூடு சம்பவம் நடைபெற்ற இடம், ஜீப் விடப்பட்ட இடம், யாழ் ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு விஜயம் செய்து. நிலைமைகளை ஆராய்ந்தறிந்தனர் நேற்றுப் பகல் கொழும்பு திரும்பிவிட்டனர் (மா)

## காசுக்கட்டளையில் 1000 ரூபா வரை அனுப்பலாம்

(கொழும்பு)

சகல அஞ்சல் அலுவலகங்களிலும், முகவர் அஞ்சல் அலுவலகங்களிலும் உள்ளூர் தந்தி அல்லது சாதாரண காசுக்கட்டளைகளுக்கு வழங்கக் கூடிய ஆகக் கூடிய தொகை 600 ரூபா விலிருந்து 1,000 ரூபாவாக எதிர்வரும் மார்ச் முதலாம் திகதியிலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 'ஏ' 'பி' உப அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படக்கூடிய காசுக்கட்டளைகளுக்கான ஆகக்கூடிய தொகை 600 ரூபாவாக விருக்கும். (வெ)

## ரூ. 3 லட்சம் ஜவுளிகள் சிக்கின!

(கொழும்பு)

புறக்கோட்டையிலுள்ள பிரபல ஜவுளிக்கடையொன்றில் திடீர்வேட்டை நடத்திய சுங்கப்பகுதியினர் சுமார் 3லட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டுக் கடத்தல் ஜவுளிகளைக் கைப்பற்றினார்கள்

இந்தக் கடத்தல் வேட்டையில் சுங்கப் பகுதியைச்சேர்ந்த சுங்கப்பகுதி உதவித் தடுப்பு அதிகாரிகள் திருவாளர்கள் கே. கே. பாலச்சந்திரா, என். விஜயரத்தினம், கே. ஏ. தர்மதாஸ ஆகியோர் ஈடுபட்டனர்

கைப்பற்றப்பட்ட பொருட்கள் சுங்கப்பகுதி உதவி கலெக்டர் திரு பாத்தலமியுஸ் முன் ஆஜர் செய்யப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன.

## மரண அறிவித்தல்

### திருமதி லலிதாதேவி பேராயிரம்பிள்ளை

திருமதி லலிதாதேவி பேராயிரம்பிள்ளை காலமானர். இவர் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியையும், ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியர் பேராயிரம்பிள்ளையின் மனைவியும், கிரிதரன் (இந்தியா), முரளீதரன் (பேராதனைப் பல்கலைக் கழகம்), கௌசல்யா, அகிலா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் தாயுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனத்திற்கு 21-2-83 நாளை திங்கட் கிழமை மாலை 4-00 மணிக்கு அவரது சுதுமலை இல்லத்திலிருந்து] எடுத்துச் செல்லப்படும்.

6264

## தோட்டக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இது சம்பந்தமாக தேடுதல் நடாத்திய இராணுவத்தினர், அவர் வீட்டில் இல்லாததைத் தொடர்ந்து குருநகர் இராணுவ முகாமுக்கு வரும்படி வீட்டுக்காரரிடம் தெரிவித்துள்ளனராம். (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி ப. க. நாதன்

திருமதி பராசக்தி கதிர்காம நாதன் இறைவனடி சேர்ந்துவிட்டார். வடமாகாண வித்தியாதிகாரியாகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு V. K. நாதன் அவர்களின் அன்புப் பாரியாரும், (அரசாங்கக் கமத்தொழிற் கல்லூரி போதனாசிரியர்) கலாநிதி பத்மநாதன், பிரயாண ஒழுங்குகள் ஆலோசகர் திரு. ரங்கநாதன், கௌஸாம்பிகை நோவா ஸ்கோஷியா - மனித உரிமைகள் சிரேஷ்ட உத்தியோகத்தர், சட்டத்தரணி ஜெகந்நாதன், லலிதா ஆகியோரின் அருமைத்தாயாரும், கமலா, இலங்கை வர்த்தகக் கூட்டுத்தாபன உதவிப் பொது முகாமையாளர் தேவா, யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரி போதனாசிரியர் வைத்திய கலாநிதி C. C. பாலசுப்பிரமணியம், ஹாலிபக்ஸ் சேர் பிரெட்ரிக் பிரேசர் பாடசாலை சிரேஷ்ட ஆலோசகர் சுந்தரி, நியூயோர்க் மௌன்ற் வசனாய் மருத்துவக் கல்லூரியில் உதவிப் போதனாசிரியராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற கலாநிதி C. மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வைத்திய கலாநிதி ஹரீந்திரநாத், தர்ஷிகா, ஷிரோமி ஆகியோரின் ஆசைப்பேர்த்தியாருமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று 20-2-83 ஞாயிறு காலை10-00 மணியளவில் 'துவாரகா' கச்சேரி - நல்லூர் வீதி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொழும்புத்துறை துண்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும். உறவினரும், நண்பர்களும் இத்தகவலைத் தயதுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

6253

## நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

பழை கூத்தியவத்தை சனசமூக நிலையவருடாந்த பொதுக்கூட்டம் நிலைய வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் : கு. நடேசபிள்ளை உபதலைவர்: வை சந்திரபாலன் செயலாளர்:எஸ். ஆர். ஞானசுந்தரம் உபசெயலாளர்:ஆ. ராஜ்குமார் பொருளாளர்;மு. சின்னத்துரை

6பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## குமண...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொலைவிலுள்ள 'பொப்போ பென்ஹானு' என்ற தீவுக்குகே உபாலி விமானத்தைத் தேடும் நடவடிக்கைகளைப் பலப்படுத்தியிருப்பதாகவும் சுழியோடிகள் தேடுதலைச் செய்கிறார்கள் என்றும் இலங்கையின் இந்தோனேஷியத்தூதுவர் திரு. கே. மாணிக்கலிங்கம் தகவல் தெரிவித்துள்ளார்.


சகலவிதமான மணிக்கூடுகளையும்
உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும்
புதிய மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

டில்கா வாச் வேக்ஸ்
Dilka Watch Works
(Opposite Bus stand)
(பஸ்நிலைய எதிர் மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன் : 24174.

'யூனியன்' நீரிறைக்கும் யந்திரத்தை
இன்றே வாங்குங்கள்
உங்களுக்கு உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும்
பாவனையாளருக்கு ஒரு விசேட சலுகை
யூனியன் நீரிறைக்கும் யந்திரம் வாங்குபவர்களுக்கு

1. காஸ்ற் ஐயன் புட்வால்வ் [C I. Foot Valve]
2. பிரஸ் கப்பிலிங் செட் [Coupling Set]
3. ஜி. ஐ. பெண்ட் [G .I Bend]
4. ஹோஸ் கிளிப்ஸ் [Hose Clips]

ஆகியவை இலவசமாக வழங்கப்படும்
இன்றே வாங்குங்கள்
சாமுவேல் சன்ஸ் அன் கம். லிமிட்.
206, 208, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

PRE: BUDGET BARGIN SALE
பட்ஜெட்டுக்கு முன் விலைகுறைப்பு
சிலதினங்கள மட்டும்
ஆர்பிக்கோ மெத்தைகள், கதிரைகள் (ஸ்ரீல்)விலைகளில் கணிசமானளவு குறைக்கப் பட்டுள்ளன (5% கழிவுடன்)

| அளவுகள் | விற்பனை விலை ரூ. சதம் | தற்போதைய விலை ரூ. சதம் |
|---|---|---|
| 72'' × 48'' × 4'' | 800.00 | 760.00 |
| 72'' × 48'' × 3'' | 700.00 | 665.00 |
| 72'' × 36'' × 4'' | 580.00 | 550 00 |
| 72'' × 36'' × 3'' | 470.00 | 450.00 |

மற்றும் நிகரற்ற கண்கவர் மரத்தளபாடங்கள் மகாராஜா செற்றிகள் ✶ டயனிங் ரூம் செற்றிகள் ✶ கதிரைகள் ✶ மேசைகள் சோகேசுகள் ✶ கண்ணாடி மேசைகள் ✶ ரி.வி. மேசைகள்
பிரம்புத் தளபாடங்கள் அனைத்திற்கும்.

டில்கா பேணிச்சர் பலஸ் காட்சியறை
234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன் 24186
(FREE DELIVERY IN 3 MILES RADIUS)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ... யாழ்ப்பாணம் ... வீதி 66-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under ...
Q.N 100236/81 Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126;